**IN THE COURT OF THE DISTRICT MUNSIF, SENDAMANGALAM.**

**O.S.No. 16/2022** **P.W.1**

Deposition of witness for solemnly affirmed by Tmt.S.Sangeetha, Assistant of this court on 04.03.2026 in accordance with the provision of the Act 1873.

| | | |
|---|---|---|
| Name | : | லோகாம்பாள் |
| Husband Name: | : | சுப்ரமணி |

**9 முதல் 11 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் என்ன படித்துள்ளேன் என்றால் 12ம் வகுப்புவரை படித்துள்ளேன். நான் என்ன பரிகாரம் கேட்டு இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால், எனது நிலத்திற்கு மேற்குபுறத்தில் உள்ள குளத்தின் கரையை அழித்து ரோடு அமைக்க பிரதிவாதிகள் முற்பட்டதை பிரதிவாதிகள் ரோடு போடக்கூடாது என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன். இவ்வழக்கு எத்தனை பிரதிவாதிகள் மீது தாக்கல் செய்துள்ளேன் என்றால், 1 முதல் 7 பிரதிவாதிகள் மீதும் பஞ்சாயத்து மீதும் தாக்கல் செய்துள்ளேன். இவ்வழக்கில் 9 முதல் 11 பிரதிவாதிகள் என்ன பதிலுரை தாக்கல் செய்துள்ளார்கள் என்று நான் படித்துப் பார்த்து தெரிந்துக்கொண்டேனா என்றால் இல்லை. மேற்படியார்கள் என்ன பதிலுரை தாக்கல் செய்துள்ளார்கள் என்று வழக்கறிஞரிடம் கேட்டு தெரிந்துக்கொள்ளவில்லை என்றால் சரிதான். எனது சொத்திற்கு அருகில் கரை உள்ளதாக சொல்லும் நான் அதன் அகலம் மற்றும் நீளத்தை பொறுத்து நீதிமன்ற ஆணையரை நியமித்து அளவீடு செய்ய மனு ஏதேனும் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை.

தாவா பிராதில் உள்ள சொத்துவிவரத்தில் எனது நிலத்தை மட்டும்தான் குறிப்பிட்டுள்ளேன் ஆனால் மேற்படி கரை எந்த சர்வே எண்ணில் செல்வதாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். அதேபோல் மேற்படி கரை எந்த சர்வே எண்ணில் செல்வதாக குறிப்பிட்டு எனது பிராது சங்கதிகளில் சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். எனக்கும், 1 முதல் 7 பிரதிவாதிகளுக்கும் உள்ள முன்விரோதத்தின் காரணமாக இவ்வழக்கில் 9 முதல் 11 பிரதிவாதிகளை பொய்யான சங்கதிகளை சொல்லி தரப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளனர் என்று சொன்னால் சரியல்ல.

எனது பிராதில் முறையான சொத்து விவரங்களும், சங்கதிகளும் குறிப்பிட்டு சொல்லாததால் இவ்வழக்கு தள்ளுபடியாகக் கூடியது என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை – இல்லை.**

Sd/-E.Ridhula
DM,SDM.

Sd/Logambal